பகுதியிலே அந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினரே காங்கிரஸ் கட்சி உறுப்பினரே இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிறார். நான் சொல்ல வருவது அது ஒரு சமுதாயப் பிரச்சினை. ஒவ்வொரு ஊரிலும் நடக்கிறது. பல இடங்களில் நடக்கிறது. அதைப் பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் மேலும் பிளவுபடுத்தும் போக்கை கையாள்வதற்குப் பதிலாக வகுப்பு ஒற்றுமையைக் கையாளவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்றாலே வன்னியர்கள், வன்னியர்கள் என்றாலே பாட்டாளி மக்கள் கட்சி என்று தவறாகச் சுட்டிக் காட்ட மாட்டோம். அங்கே கைது செய்யப்பட்டிருக்கிற 81 பேரை பாபநாசம் சிறையிலே மறு நாள் டாக்டர் இராமதாஸ் போய் சந்திக்கிறார். அப்படி என்றால் அவர்கள் யார்? ஏன் அவர்களைப் போய் இவர் சந்திக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன் : தவறான தகவல். 12 ஆம் தேதி தான் அவர் அங்கே போகிறார்.

6. விதி 110 இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

பொது விநியோகத்தில் வழங்கப்படும் குறைந்தவிலை அரிசியை அனைவரும் பெறலாமென்று ஆணை பிறப்பிக்கப்படுவது குறித்தும் குறைந்த விலை அமலாகும் தேதி குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 110-இன் கீழ் ஒரு முக்கியமான அரசின் முடிவைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அத்தகைய முக்கிய முடிவு ஒன்றைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் அரிசி பெறுவதற்கான தகுதி மாத வருவாய் அடிப்படையில் ரூ.750ம், அதற்குக் கீழும் என்று நேற்று அறிவித்திருந்தேன். அதுபோலவே $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் குறைந்த விலை அரிசி இனி வழங்கப்படமாட்டாது என்றும் அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து

1992 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பல்வேறு தரப்பினர் என்னைச் சந்தித்து இந்த முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் வழக்கம்போல் தொடர்ந்து குறைந்த விலை அரிசி பெற வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்கூறிய நிபந்தனைகளை நீக்கி ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆணையின்படி எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் சாதாரண அரிசி கிலோ 2 ரூபாய்க்கும், சன்ன மற்றும் மிகச் சன்ன ரக அரிசி கிலோ 3 ரூபாய்க்கும் விற்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முடிவின் பயன் விரைவாக மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் 1—6—1992 முதல் அமலுக்கு வரும் என்று அறிவித்திருந்ததை மாற்றி, வருகின்ற 1—5—1992 முதலே இந்த விலைக் குறைப்பு அமலுக்கு வரும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால அரசுக்கு கூடுதலாக ஆண்டு ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவாகும். தற்போது அரசுக்கு ஏற்பட்டு வரும் மானியச் செலவான 340 கோடி ரூபாய், இந்த விலைக்குறைப்பினால் 400 கோடி ரூபாயாக உயரும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மகிழ்ச்சியான செய்தி. திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைக்கு அரிசி வழங்குவதற்கு ஒரு பொருளாதார வரம்பை அறிவித்தார்கள். நானும் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அறிவித்திருக்கிறார்கள். அப்படி மறு பரிசீலனை செய்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் திரு. வீ. சுப்பிரமணியன். (குறுக்கீடுகள்) தமிழ்நாடு முழுமையும் உள்ளவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு, இந்த அறிவிப்பின் காரணமாகத் தங்களுடைய நன்றியையும மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டிருப்பார்கள். (மேஜையைத் தட்டும் ஒலி) என்பதைப் பேரவையின் அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு.வீ. சுப்பிரமணியன்.